Y.M.C.A வாசிக

★ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி விடுத்துள்ள அறிக்கை

# தென் தமிழீழ மக்கள் தினமும் படும் துயரங்கள் எதுவுமே எந்த தொண்டர் நிறுவனங்களுக்கும் தென்படுவதில்லை

இரத்தவெறிபிடித்தலையும் இராணுவத்தினரும் முஸ்லிம் படையினரும் எந்தநேரமும் தம்மை வந்து இழுத்துச் செல்லலாம் என்பதைஎண்ணி நடுங்கி நாட்களைக்கழிக்கும் பெண்களும், அதேபடையினர் தம்மை எப்போதும் வந்து கைதுசெய்து சொலைக்களத்திற்கு இழுத்துச் செல்வார்கள் என்ற அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண்களும்தான் இன்று தென் தமிழீழத்தில் வாழாமல் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் இவ்வாறு விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி தென் தமிழீழ மக்களுக்கு உதவும் வாரம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

'இனி இழப்பதற்கு எதுவுமே இல்லை' என்ற நிலையில் உயிருடன் இயங்கிக்கொண்டிருக்கும் இவர்கள் யார்? வேற்று நாட்டவர்களல்ல எமது சொந்தச்சகோதரர்கள். இவர்கள் சொந்தமண்ணிலேயே வாழவிடாமல் துரத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அகதி முகாம் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்போதும் அந்த மனித மிருகங்கள் வரலாம், தாம் கொல்லப்படலாம் என்பதை எதிர்பார்த்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பட்சபாதகமற்ற முறையில் நாம் சேவைபுரிகின்றோம் என்று பேச்சளவில் கூறிக் கொள்ளும் எந்த சமூகசேவை நிறுவனங்களுக்ம் தென் தமிழீழத்தில் எமது மக்கள் படும்துயரம் தெரியவில்லை. போதாதென்று இப்போது இயற்கை கூட அந்த மக்களை அல்லலுறுத்துகின்றது பெருந்தொகையானோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவ வசதியின்மையால் இயற்கை மரணங்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 13 பிரமோதூத கார்த்திகை 24 (10-12-1990) திங்கள்

நிவாரணத்தில் மோசடி கண்டுபிடிக்கப்பட்டது

## குருநகரில் மற்றும் ஒரு கிராமசேவகரும் உதவியாளர் ஐவரும் புலிகளால் கைது

நிவாரணத்தில் மோசடி தொடர்பாக குருநகரில் மற்றும் ஒரு கிராமசேவகரும் அவரது உதவியாளர்கள் ஐவரும் நேற்று முன்தினம் இரவு புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தற்போது வழங்கப்படும் நாலாம் கட்ட நிவாரணம், கடந்த வருடம் வழங்கிய நாலாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு என்பவற்றில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக J/70 குருநகர் மேற்கு கிராமசேவையாளர் விடுதலைப் புலிகளால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதே கிராமசேவகருக்கு உதவியாளர்களாகப் பணியாற்றிய இருபெண்கள் உட்பட ஐவர் நாலாம் கட்ட நிவாரணத்தில் மோசடி செய்ததாகவும் புலிகளால் விசாரணைக்காக

— 4ஆம பக்கம் பார்க்க

# காங்கேசன் பகுதியில் கைதானோர் தேவாலயத்தில் தடுத்து வைப்பு

## கல்வியதிகாரி, மகள் பற்றித் தகவல் இல்லை

காங்கேசன்துறை, தையிட்டிப் பகுதிகளில் கடந்த அக்டோபர் 20 ம் திகதியன்று இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட பலர் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி காங்கேசன்துறைக்குச் சென்று வந்ததையடுத்து அவருக்கு வரவேற்பளிப்பதற்காக வீடுகளில் வைத்து பிடித்துத் திரட்டப்பட்ட இவர்கள் அவர் கொழும்பு திரும்பிய பின்னர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதியின் விஜயத்தின் போது அவரை வணங்கி வரவேற்பளிக்க வயோதிபர் ஒருவர் பயன்படுத்தப்பட்டதாகவும், அக்காட்சி ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டதாம்

இதேவேளை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு சீ. எஸ். சுப்பிரமணியத்தினதும், அவரது மகள் செல்வி சத்தியாவினதும் நிலை பற்றியறிய எடுத்த முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை.

(32)

## இராணுவ கெடுபிடிகளால் கொழும்பு செல்லமுடியாது

## கோட்டையைப் பார்த்தவர் காலை இழந்தார்

யாழ் கோட்டையைப் பார்வையிடச் சென்றவர் ஒருவர் நேற்று தனது வலது காலை இழந்தார். இவர் மக்கள் போவதற்காக குறித்து ஒதுக்கப்பட்ட பாதையை விட்டு விலகி பார்க்கமுயன்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

பசுபதி ரவிநாதன் (22) குமரபுரம், பரந்தன் என்பவரே இவ்வாறு மிதி வெடியில் சிக்கி தனது காலை இழந்துள்ளார்.

(71)

## கொழும்பு-யாழ் விமானச் சேவைக்கு இன்று 43வயது பூர்த்தியாகிறது

பலாலி விமான நிலையம் பொதுமக்களின் சேவைக்காக தனது சேவையை நடாத்தத் தொடங்கி இன்று 43 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

1947 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியே அரசும் - 'எயர்சிலோன்' ஸ்தாபனமும் இணைந்து இச் சேவையை கொழும்பிலிருந்து பலாலிக்கு நடத்தின. (32)

## மதியஉணவு, விவசாயம், வாழ்க்கைத்திறன் பாடங்களுக்கு முற்பணம் பெற்ற பாடசாலைகள் அவற்றை 14-ம் திகதிக்கு முன்னர் மீளளிக்கவேண்டும்

மதிய உணவு வழங்கல், விஞ்ஞானம், விவசாயம், கைப்பணி, உடற்பயிற்சி, வாழ்க்கைத் திறன் கல்வி முதலிய பாடங்களுக்கள் இம்மாதம் 14-ம் திகதிக்கு முன்னர் செலுத்தாவிட்டால் டிசம்பர் மாதச்

எடுத்த முயற்சிகள் இது வரை பலனளிக்கவில்லை. (32)

மதிய உணவு வழங்கல், விஞ்ஞானம், விவசாயம், கைப்பணி, உடற்பயிற்சி, வாழ்க்கைத் திறன் கல்வி முதலிய பாடங்களுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக யாழ் கல்வித் திணைக்களத்திலிருந்து முற்பணம் பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், அலுவலர்கள் இம்மாதம் 14-ம் திகதிக்கு முன்னர் செலுத்தாவிட்டால் டிசம்பர் மாதச் சம்பளத்திலிருந்து இம் முற்பணங்கள் முழுவதும் கழிக்கப்படும் என யாழ் கல்வித் திணைக்களக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு செல்லமுடியாது வவுனியாவிலிருந்து திரும்பினர்

கடந்த மாதம் 20-ம் திகதி முதல் வவுனியாப் பகுதியில் கொழும்பு செல்வதற்காக காத்து நின்ற வடபகுதிப் பிரயாணிகள் வவுனியாவிற்கு அப்பால் செல்ல முடியாது நேற்றுத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

நொச்சிமோட்டை, மடுக்கோயில் பகுதிகளில் இன்னமும் பல பிரயாணிகள் கொழும்பு செல்வதற்காகக் காத்து நிற்பதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

### வி. பு. மக்கள் முன்னணி கோரிக்கை

## நெருக்கடியான நிலையிலும் ஊழியர் வேலைக்கு வரவேண்டும்

சிங்கள பேரினவாத அரசும் அதன்படைகளும் ஏற்கனவே செயல் இன்றியிருக்கும் நிர்வாக அமைப்புக்களை வான் தாக்குதல், ஊரடங்கு உத்தரவு போன்ற நடவடிக்கைகளால் முற்றாகச் செயலிழக்கச் செய்ய முயன்று வருகிறார்கள்.

இந்த முயற்சிகளை முறியடித்து தமிழீழத்திலுள்ள நிர்வாக அமைப்புக்களை தொடர்ந்து இயங்கச் செய்வது எம்மவரினது தலையாய கடமையாகும். இதுவே எமது போராட்டம் வெற்றியளிப்பதற்கு நாம் செய்யும் உதவியாகவும் அமையும்

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிமாவட்ட செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள வேளைகளில் கூட சந்தைகள், விற்பனை நிலையங்கள், கூட்டுறவுக் கடைகள் திறக்கப்பட்டு மக்கள் தங்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் நேற்று ஹெலிகப்டர் தாக்குதல்

நீண்ட நாட்களுக்குப் பின் அச்சுவேலிப்பகுதியல் ஹெலி தாக்கியதில் ஒருவர் காயமடைந்தார்.

வல்லை வீதிப்பக்கத்தில் ஆரம்பமான இத்தாக்குதல் அச்சுவேலிச் சந்தை, பஸ் நிலையப்பகுதி, பத்தமேனி, வளலாய், இடைக்காடு, தென்மூலை, கொட்டகப்புலம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவிலடியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தார். (32)

### றிச்சார்ட் டி சொய்ஸா கொலை தொடர்பாக

## எதிர்க்கட்சி, ஆளும் கட்சியினர் பாராளுமன்றத்தில் சொற்போர்!

நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சித்தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்ஸா கொலை குறித்து விசாரணை நடாத்த ஆணைக்குழு வொன்றை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக 21எதிர்க்கட்சிகளின் கோரிக்கை அடங்கிய அறிக்கை ஒன்றையும் எதிர்க்கட்சித் தலைவி சமர்ப்பித்தார்.

இவ்வேளை சபாநாயகர் பிரேரணை சரியான முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், கொலை குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## விசர் நாய்க்கடி நோயாளர் கிளிநொச்சியில் அதிகரிப்பு

கிளிநொச்சிப் பகுதியில் விசர்நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் விசர் நாய்களுக்கு இலக்கான பலர் அதற்கான தடுப்பூசி மருந்து இன்றிசிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட பலர் யாழ்ப்பாணம் வந்துள்ள போதிலும் இங்கும் இந்த தடுப்பூசி மருந்து போதியளவு இன்றி இவர்கள் சிகிச்சை பெறமுடியாது கஷ்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக் கிழக்கு நெற்செய்கை பாதிப்பினால் வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதியாகும்?

இராணுவ நடவடிக்கைகளினாலும் எரிபொருள் மற்றும் உரத்தடை காரணமாகவும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நெற்செய்கை இம்முறை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அதிக விளைச்சல் தரும் அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இதன் காரணமாக அதிகமான வயல்கள் நெல் விளைச்சல் இன்றிக் காணப்படுகின்றன.

வடக்குக் கிழக்கு நெல் விவசாயம் ஓரளவுக்கு இலங்கையின் அரிசித்தேவையைப் பூர்த்தி செய்து வந்தது.

ஆனால் இம் முறை வெளிநாடுகளில் இருந்தே அரிசியைத் தருவிக்க வேண்டியிருக்கும் என விவசாய வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்குக் கிழக்கில் விவசாயம் பாதிக்கக் கூடாது என்பதற்காக எரிபொருளை

—04 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலிக்கு வந்த கடிதம்

# அகதிகளிடம் வசதிக்கட்டணம்?

ஆசிரியர்,
முரசொலி.

போரின் மத்தியில் வாழும் மக்கள் இன்று வீடு வாசல்களை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் அண்மையில் உள்ள பாடசாலைகளில் கற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருதனாமடம் கோட்டத்தில் உள்ள பிரபலமான மகளிர் கல்லூரி ஒன்றில் அகதிகளாகியுள்ள மாணவிகளிடமும் வசதிக்கட்டணம் வசூலிக்கிறார்களாம்!

அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டிய இக்காலத்திலுமா இப்படி?

த. சோமு

கந்தரோடை,
சுன்னாகம்.

## இந்திய அணி தோல்வி

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் கோவாவில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி ஏழு விக்கட்டுகளால் மிகவும் சுலபமாக வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களத்தில் இறங்கிய இந்திய அணி எவரும் எதிர்பாராத விதத்தில் தனது சகல விக்கட்டுகளையும் துரித கெதியில் இழந்து 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதுவரை காலமும் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் இந்தியா பெற்ற ஆகக்குறைந்த ஓட்டங்கள் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி தனது துடுப்பாட்டத்தில் 3 விக்கட்டுகளைப்பறிகொடுத்து வெற்றி இலக்கான 137 ஓட்டங்களை வெகுவிரைவாகப் பெற்று, இந்தியாவைத் தோற்கடித்தது. (16)

வட, கிழக்கு அபிவிருத்திக்கென

# 50 கோடி டாலர் பெற்று அரசு இன்னமும் செலவிடாதுள்ளது!

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கெனக் கூறி ஸ்ரீலங்கா அரசினால் பெருந்தொகை நிதி வெளிநாடுகளிடம் இருந்து பெறப்பட்டுள்ளது என்பதனை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் அவர் நிகழ்த்திய உரையின் போது வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கென 50 கோடி டாலர் நிதி வெளிநாடுகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது என்று கூறினார்

இந்நிதி வட, கிழக்கில் தற்போது நிலவும் நிலையினால் அங்கு இன்னமும் செலவிடப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளது இந்நிதி தெற்கின் நலனுக்கு செலவிடப்படும் என்ற ஐயத்தை வலுப்படுத்துவதாக உள்ளது எனக் கூறப்படுகிறது.

உதவிக்கரம் நீட்ட 'யோகி' கோரிக்கை

# காடுகளிலும், வயலோரங்களிலும் கிழக்கு மக்கள் ஜீவமரணப் போராட்டம்

''கிழக்கு மாகாணத்தில் நம் மக்கள் படும் துயரங்களை நாம் உணர்வுபூர்வமாக உணர்ந்து அவர்களுக்கு உதவவேண்டும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி வட்டுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் பேசுகையில் கூறினார்.

''கிழக்கில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது ஸ்ரீலங்கா இராணுவம், முஸ்லிம் காடையர்கள், இனத்துரோகிகள் இணைந்து தமிழர்களைப் படுகொலை செய்கின்றனர்.

மக்கள் காடுகளிலும், வயல் வரம்புகளிலும் உண்ண உணவின்றி உறங்க இடமின்றி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

அங்கு நிகழும் கொடுமைகள் எண்ணிலடங்காதவை. நாம் எமது சுகபோகத்தை மறந்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

மக்கள் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. எனவே போராட்டம் வெற்றி பெறுவதில் சந்தேகமே இல்லை'' என்றும் அவர் கூறினார்.

மற்றும் பலரும் பேசினர். (37)

புலிகள் குற்றச்சாட்டு

# யாழ் வைத்தியசாலையை அரசு புறக்கணிக்கிறது

''யாழ் போதனாவைத்தியசாலைக்குத் தேவையான மருந்துவகைகளை அனுப்ப ஸ்ரீலங்கா அரசு மறுத்து விட்டது'' என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஏற்கனவே எரிபொருள் தடையால் தமிழ் மக்கள் படும் துயர்பற்றியும் விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் இச் செய்திகள் கூறின.

நோய் எதிர்ப்பு மருந்துகள், ஏற்பு மருந்து உட்பட தடுப்பூசிகள், விஷ எதிர்ப்பு மருந்துகள் ஆகியவை அனுப்பப்படாமையால் மக்கள் நோய்களால் இறக்கும் அபாயம் தொடர்ந்து நிலவுவதாகவும் புலிகள் மேலும் குற்றம் சுமத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பூட்டிய சைக்கிள்கூட திருடப்படுகிறது

பூட்டப்பட்ட நிலையில் வைக்கப்படும் சைக்கிள்கள் கூட இப்போது திருட்டுப் போகும் சம்பவங்கள் திருநெல்வேலிப் பகுதியில் அடிக்கடி நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் அம்பாள் ஸ்டோர்ஸ் உரிமையாளர் ச. தனபாலசிங்கம் என்பவரின் புத்தம் புதிய 'ஏசியா' சைக்கிள் பூட்டப்பட்ட நிலையில் அவரது கடையின் முன்புறமிருந்து சிலதினங்களுக்கு முன் திருடப்பட்டுள்ளது. தாவடியில் எம். ஸ்ரீகாந்தன் என்பவரது சைக்கிள் திருடப்பட்டுப் பின் மீட்கப்பட்டது. இதுபற்றிப் பொதுமக்கள் விழிப்புடனிருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள். (66)

அச்சுவேலி - வயவை வீதி

## பாம்பு படையெடுப்பு

பலாலி இராணுவ முகாம் தாக்குதல்கள் காரணமாக அயற் கிராமங்களிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் தஞ்சம் புகுந்துள்ள போதிலும் அச்சுவேலி - வயாவிளான் வீதியில் 'அன்பகம்' கன்னியாஸ்திரி மடம் பகுதியில் மக்கள் தங்கள் வீடுகளிலேயே தொடர்ந்து தங்கியுள்ளனர்.

ஒட்டகப்புலம் - சங்கானை வல்லை வீதியின் கரையோரங்கள் கோணப்புளி, இலந்தை, நாகதாளி போன்ற முள் மரங்களால் மூடிக் கிடப்பதால் வீதிகளில் பாம்புகள் தாராளமாகத் திரிவதாகப் பாதசாரிகள் முறையிட்டுள்ளனர்.

இவ்வீதியைத் துப்புரவு செய்ய எவரும் முன்வராமையே இதற்குக் காரணம் என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் வே. துரைராசா என்னும் தபால் ஊழியர் இவ்வீதியால் செல்கையில் பாம்பினால் தீண்டப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (36)

# மக்கள் பங்களிப்பு முழுமையானால் மட்டுமே இன விடுதலை கிடைப்பது விரைவில் சாத்தியம்

- ஆஞ்சநேயர்

''தமிழ்மக்கள் இன்னமும் முழுமையாக சுயநலப் போக்கைக் கைவிடவில்லை. இன விடுதலைக்காக அவர்கள் தம் முழுப் பங்களிப்பையும் செய்தாலே மீட்சி கிடைக்கும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் கூறினார்.

மட்டுவில் தெற்கில் இடம் பெற்ற சிறப்புக் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

''இனவிடுதலைக்காக மக்கள் இன்னமும் சிறப்பான விதத்தில் ஒத்துழைக்க வேண்டும் விடுதலை வேங்கைகள் எண்ணிக்கை பெருக வேண்டும். முழுப் பலம் இருந்தால் எதிரியை வெல்வது மேலும் சுலபமாகும்'' என்றும் அவர் சொன்னார்.

மற்றும் பலரும் உரையாற்றினர்.

## நாட்டில் தொழிலற்றோர் எண்ணிக்கை 13 இலட்சம்

நாட்டில் தொழிலற்றோர் பதின்மூன்று இலட்சமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொள்கைத் திட்டமிடல் சுற்றாடல் அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அடுத்த வருடம் இத்தொகை ஒரு இலட்சத்தால் அதிகரிக்குமென அஞ்சப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## சீமெந்து ஊழியர் மரண சகாய நிதி

சீமெந்து தொழிற்சாலையிலிருந்து இளைப்பாறிய அல்லது இறந்த தொழிலாளர்கட்கு கிடைக்க வேண்டிய ஒய்வுகாலமரணசகாயநிதியை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி கிடைக்க உரித்துடையவர்கள் ஒய்வுகால மரண சகாய நிதிச் சங்கத் தலைவர் செ. நாகராசாவின் தெல்லிப்பழை இல்லத்திற்கு 12-ம் திகதி சென்று கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும்

## ஈச்சமோட்டை குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

ஈச்சமோட்டைக்குளம் தற்போது பெய்து வரும்பெரும் மழையால் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இக்குளத்தின் வாய்க்கால் பகுதிகளில் குப்பை கூளங்கள் போடப்பட்...ளம்பும் துர்நாற்றம் சுகாதார சீர்கேடுகளை உண்டாக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இக்குளம் உடைப்பெடுக்கும் பட்சத்தில் அயல் மக்கள் குடிபெயர வேண்டிய இக்கட்... (16)

## மீண்டும் ஆரம்பம்

முறைசாராக் கல்விப் பிரிவின் விவசாய இழுபொறி இயந்திரவியல் பழகுபார்த்...

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி - யாழ்ப்பாணம்

வெளிவாரியாக பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

A/L-ல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட, பயிலுநர் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகளை...

A/L-ல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட, பயிலுநர் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி**
**22 - 12 - 1990**

விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி

12049

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவதப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

திக்கது. (36)

## மீண்டும் ஆரம்பம்

முறைசாராக் கல்விப் பிரிவின் விவசாய இழுபொறி இயந்திரவியல் பழுதுபார்த்தல் சுருக்கெழுத்து தட்டச்சு வகுப்புகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12068

### சேவை

கால்நடைக்கு உணவு, அடுப்புக்கு விறகு இப்பில் இப்பில் நட்டுப் பயன் பெறுவீர். ரூ 2/- அஞ்சல் முத்திரை அனுப்பி இப்பில் இப்பில் விதை பெறுவீர். மில்க்வைற் யாழ்ப்பாணம். 12047

உடையவர்கள் ஓய்வுகால மரண சகாய நிதிச் சங்கத் தலைவர் செ. நாகராசாவின் தெல்லிப்பழை இல்லத்திற்கு 12-ம் திகதி சென்று கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

வடக்கில்

## ஊரடங்கு முற்றாக நீக்கம்

வடக்கில் ஊரடங்கு உத்தரவு நேற்று முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை உணவுப் பொருட்களுடன் 35 லொறிகள் அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## கலைஞர் மீதான எதிர்ப்பு வலுக்கிறது

கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழக அரசைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பிரதமரிடம் தாம் மனு ஒன்றினைக் கையளிக்கவிருப்பதாக தமிழக ஜனதாதள் (எஸ்) கட்சி எம். எல். ஏ. திரு. பொன். விஜயராகவன் அறிவித்துள்ளார்.

ஈச்சமோட்டைக்குளம் தற்போது பெய்து வரும்பெரும் மழையால் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இக்குளத்தின் வாய்க்கால் பகுதிகளில் குப்பை கூழங்கள் போடப்பட்டுள்ளதால் அவற்றில் இருந்து கிளம்பும் துர்நாற்றம் சுகாதார சீர்கேடுகளை உண்டாக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இக்குளம் உடைப்பெடுக்கும் பட்சத்தில் அயல் மக்கள் குடிபெயர வேண்டிய இக்கட்டும் ஏற்பட்டுள்ளது. (16)

தீபாவளி நாள், காலை.
குண்டு வீச்சாலும்,
ஷெல்லடியாலும்,
பலாலிப்பகுதி குலுங்குகிறது!
இடம்பெயர்ந்து ஓடும் குடிமக்களுள்
ஒரு வயோதிபர்:

''சொத்தியாலும் — வாழைப்
பொத்தியாலும்
அலைகிறம்!''

அவர் குறிப்பிட்ட சொத்தி யார்?
வாழைப் பொத்தி யார்?

அறியப் படியுங்கள் --
நாளைய முரசொலியில்
ஆரம்பமாகும்
''பலாலி தளமான கதை''

முரசொலி

எமது சிந்தனை

1990 — 12 — 10 திங்கள்

''அரைகுறைப் பண்பாடு பகட்டை நாடி ஓடும்; உயர்ந்த பண்பாடு எளிமையை நாடும்''

—பொவீ

# மேற்கே போகும் தமிழர்கள்!

''மேனாடுகளில் ஓர் ஆங்கிலோ - தமிழ்ச் சமுதாயம் உருவாகி வருகிறது!''

— சென்னையில் இயங்கும் தமிழ் ஆய்வு நிறுவனம் ஒன்று இவ்வாறு எச்சரித்துள்ளது. இவ்வெச்சரிக்கை பற்றி ஆழமாக — தொலை நோக்கோடு — சிந்திக்க வேண்டிய கடப்பாடு ஈழத்துத் தமிழர்களுக்குண்டு.

ஏனெனில் கனடா, பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, டென்மார்க், நோர்வே முதலிய நாடுகளில் பெருந்தொகையினராக வாழ்பவர்கள் ஈழத்தமிழர்களே. இவர்களிற் பெரும்பாலானோர் அகதிகளாக நுழைந்தவர்கள். தவிரவும் வேலை வாய்ப்புப் பெற்றுப் போனவர்களும் உயர் கல்விக்காகப் போனவர்களும் அங்கங்கே தங்கி விட்டார்கள். கணிசமான தொகையினர் திருமணம் புரிந்து குழந்தை குட்டிகளோடு வாழ்கிறார்கள். மிகச் சிலருக்குக் குடியுரிமை கிடைத்திருக்கிறது.

தமிழர்கள் பல காரணங்களுக்காக மேற்கே போகிறார்கள். கல்வி கற்க, உழைக்கப் போகிறவர்களை விட, அகதிகளாகப் போகிறவர்களே அதிகம். புலம் பெயர்ந்து போகிறவர்கள் எல்லோரும் உண்மையான அகதிகளா அல்லது நாட்டுச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு, வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் சுயநலமிகளா என்ற சர்ச்சையில் ஈடுபட இது தருணமல்ல.

மேனாடுகளில் வாழும் தமிழர்கள் அங்கும் தமது தனித்துவத்தைப் பேணுகிறார்களா என்பதே கேள்வி. ஓர் இனத்தைத் தனியாக இனங்காட்டுவது அதன் பண்பாடு மொழி, மதம், நம்பிக்கைகள், பழக்க வழங்கங்கள், கலைகள், வழி வழிவந்த எழுதாத சட்டங்கள் முதலியவை பண்பாட்டின் கூறுகள்.

இவற்றுள், மொழியே ஓர் இனத்தின் அசைக்க முடியாத அடையாளம்; உரைகல். மேற்குலகில், தமிழர்கள் தாம் வாழும் நாட்டு மொழியையே பயன்படுத்துகிறார்கள். தமிழின் பயன்பாடு, நண்பர் உறவினர் என்ற அந்தரங்க வட்டத்தோடு சரி.

அங்கங்கே பிறந்து வளரும் தமிழர்களுடைய குழந்தைகள் அந்த அந்த நாட்டு மொழியைத் தொட்டிலிலிருந்தே பேசுகின்றன; கற்கின்றன. பெற்றோர்கள் - தாம் ஈழத்தில் பிறந்து வளர்ந்த காரணத்தால் — அபிமானத்தால் — தம் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்க விரும்புகிறார்கள். ஆனால் அது சாத்தியப்படுவதாயில்லை.

தமிழ் கற்பதற்குரிய சூழல் மேற்கில் இல்லை என்பதைப் பெற்றோர் உணர வேண்டும். பௌதிகச் சூழலை நாம் குறிப்பிடவில்லை. மொழிச்சூழல் என்றொன்று வேண்டும். நண்பர்களோடு உறவினர்களோடு பேசும்போதும், விளையாடும் போதும், பயணஞ் செய்யும்போதும் பொது நிலையங்களில் கருமமாற்றும் போதும், கடைகளில் பொருள் பண்டங்கள் வாங்கும் போதும், பாட்டிலும், கூத்திலும், கோயிலிலும்,

## தாய்லாந்து பிரதமர் ராஜினாமா

தாயிலாந்து நாட்டுப் பிரதமமந்திரி திரு. சூநவான் பதவி விலகி விட்டார்.

அவர் தனது மந்திரி சபையில் பெரும் மாற்றங்களை செய்வதற்காகவே பதவி விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஸ்கந்தபுரத்தில் புதிய மைதானம்

ஸ்கந்தபுரத்தில் போராளிகளின் நினைவாக மைதானம் ஒன்று சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

போராளி - டானியலின் பெயர் இம் மைதானத்துக்கு சூட்டப்பட்டுள்ளது. (ப-6)

## மாணவர் தொகையை அதிகரிப்பதற்காக

# பல்கலைக்கழக அனுமதி முறையில் மாற்றம்; அமைச்சு ஆலோசனை

கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் கூடுதல் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பதற்காக பல்கலைக்கழக அனுமதி முறையைத் திருத்தியமைப்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது.

புதிய மாற்றங்கள் குறித்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

கல்வி உயர்கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி மேற்படித் தகவல்களைவெயிட்டுள்ளார்.

### பயிற்சி அற்ற ஆசிரியர்

இதேவேளை, ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து எண்பதாயிரம். ஆனால் எழுபத்து ஐயாயிரம் பேருக்குப் பயிற்சி இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இக்குறையை நிவர்த்தி செய்து பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்றும் அவர் மேலும் சொன்னார்.

## ஓய்வு பெற

# ஒய்வூதியத் திணைக்கள அதிகாரிகளும் துடிப்பு

ஓய்வூதியத் திணைக்களத்தில் ஓய்வு பெற பலர் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்கு பணியாற்றும் பயிற்சி பெற்ற பெரும் எண்ணிக்கையிலான அதிகாரிகளும் புதிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளதால் இத்திணைக்களம் பெரும் பிரச்சினையை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்படுகிறது. நாற்பதுக்கும் மேற்பட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இவ்வகையில விண்ணப்பித்துள்ளதாக அறிய வந்துள்ளது.

## பெண் மீது கொடுமை

# அபராதம் செலுத்த சென்னை பொலிஸாருக்கு உத்தரவு

சென்னைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டதாகக் கூறப்படும் பெண் ஒருவருக்கு ஐம்பதாயிரம்ரூபா நட்டஈடாகவும் ஐயாயிரம் ரூபா வழக்குச் செலவாகவும் வழங்கப்பட வேண்டும்என்றுசென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட மறுநாள் அவரைமனநோயாளி எனக்கூறி மருத்துவமனையில் அனுமதித்த பொலிஸாரின் செயல் வன்மையாகக் கண்டிக்கக் கூடியது என்று உயர்நீதிமன்றம் தன் தீர்ப்பில் கண்டனம் தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அதிக மாணவருக்கு அனுமதி

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் 180 புள்ளிகளுக்கு மேல் பெற்றும் பல்கலைக்கழக அனுமதியைப்பெற முடியாது போன மாணவர்களை பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான ஏற்பாடு

பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும்போது, பல்கலைக்கழக கல்லூரிகளில் இந்த மாணவர்களுக்கும் விரிவுரைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தி

# மனித உரிமைகளும் ஐ. நா.வும்

-- எஸ். பி. கே.

நாம் யாவரும் மனித வர்க்கம் எனும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இக் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரே அடிப்படை உரிமைகளும் சம உரிமைகளும் உடையவர்கள். இந்த உரிமைகளை மதிக்கவும் பாதுகாக்கவும் ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்புண்டு ஆண், பெண், இன, மத, மொழி, நிற வேறுபாடுகளால் இந்த உரிமைகள் மாறுபடுவதில்லை சொத்து. கொள்கை, அரசியல் கோட்பாடுகளாலும் தனிநபர் நம்பிக்கையாலும், அவற்றை மாற்ற முடியாது. ஒவ்வொருவரும் அவர் யாராயிருப்பினும், எத்தொழில் புரியினும், எதைச் சிந்திப்பினும் அவர்கள் உரிமைகளுடன் பிறந்தவர்கள்.

இவ்வாறு 1948 டிசெம்பர் 10-ல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுப் பிரகடனஞ் செய்யப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் சாசனம் கூறுகிறது.

இப்பிரகடனம் உலகெங்கும் பெருந் தாக்கத்தை விளைவித்தது அதன் வெவ்வேறு பகுதிகளை பல நாடுகள் தமது அரசியல் அமைப்பிலும் சட்டத்திலும் சேர்த்துக் கொண்டுள்ளன இப்பிரகடனம் ஒரு கொள்கை அறிக்கை. அது சொல்லும் சுதந்திரத்தையும் உரிமையையும் மதித்து வாழ ஒவ்வொரு மனிதனையும் அது வேண்டி நிற்கிறது.

மக்கள் தம் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமுடையவர்கள். ஆனால் பல்லாயிரம் பேர் தம் சிந்தனை வெளிப்பாட்டின் காரணமாகச் சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுகின்றனர். பாகுபாடின்றி வாழும் உரிமையுடையவர்கள் இவ்விரோதச் செயல்களில் இன்னல் படுகிறார்கள். சிறுபான்மையினர் தம் உரிமைகளைப் பெறும் வழிகள் மறுக்கப்படுகின்றன.

மனிதர் யாவரும் சுதந்திரமாகப் பிறந்தவர். அந்தஸ்திலும் உரிமையிலும் சமமானவர்கள் மனச்சாட்சியும் நியாய உள்ளமும் கொண்டவர்கள். ஒருவரையொருவர் சகோதரர்களாக ஏற்று நடக்கவேண்டியவர்கள். (அம்சம் 1).

எவருமே சித்திரவதைக்கும் மிருகத்தனமான. மனிதத்தன்மையற்ற செயல்களுக்கு அல்லது தண்டனைகளுக்கு உட்படுத்தப்படலாகாது (அம்சம் 5).

யாருமே காரணமின்றிக் கைதியாவதற்கும் தடுத்து வைத்தலுக்கும் உள்ளாகக்கூடாது. (அம்சம் 9).

துன்புறுத்தல்களிலிருந்து விலகி வேறு நாடுகளில் தஞ்சம் கோரி அமைதியாக வாழும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. (அம்சம் 14).

எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு இந்த உரிமை காரணமாக அவர்கள் தமது அரசியல் இறைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கவும் தமது பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியில் சுதந்திரமாக ஈடுபடவும் உரிமையுண்டு. (அரசியல் உரிமை அம்சம் 1).

சூழலை நாம் குறிப்பிடவில்லை. மொழிச்சூழல் என்றொன்று வேண்டும். நண்பர்களோடு உறவினர்களோடு பேசும்போதும், விளையாடும் போதும், பயணஞ் செய்யும்போதும் பொது நிலையங்களில் கருமமாற்றும் போதும், கடைகளில் பொருள் பண்டங்கள் வாங்கும் போதும், பாட்டிலும், கூத்திலும், கோயிலிலும், கொண்டாட்டங்களிலும் அந்த மொழி பயன்பட வேண்டும். அப்போதுதான், அது அதைப் பேசுவோரிடையே சுவறும்.

அத்தகையதொரு சூழல் மேற்கில் இல்லை. பிள்ளைகள் காதில் எந்த நேரமும் ஆங்கிலமோ, ஜேர்மனோ, சுவிஸோ, நோர்வீஜியனோ விழுந்தபடி இருக்கும். வீட்டிலும் பெற்றோர் அயல் மொழியையே பயன்படுத்தக்கூடும். பிள்ளை எப்படித் தமிழ் மொழியை உள்வாங்கும்?

மொழியை விட்டாலும், பண்பாட்டின் ஏனைய கூறுகளான சமய அனுஷ்டானங்கள், பண்டிகைகள், கலைநிகழ்ச்சிகள் என்பனவற்றின் ஊடாகப் பெறவேண்டிய தமிழ் அனுபவத்துக்கு எங்கே போவார்கள் இளைய தலைமுறையினர்? இங்கிலாந்திலே சௌத்ஹோல், கனடாவில் ரொறன்ரோ, ஜேர்மனியில் பொன் என சில தமிழ்க் குறிச்சிகள் உருவாகியுள்ளது உண்மையே. நம் இனத்தவரை அடிக்கடி சந்திப்பதோடும், நம்மூர்ச் சாப்பாட்டைச் சுவைப்பதோடும் அவைசரி.

ஈழத்தமிழர் முகம்கொடுக்கவேண்டிய யதார்த்தம் ஒன்றுண்டு; எந்தத் தனித்துவத்தை இழக்கும் ஆபத்து இங்கே இருக்கிறது என்று கருதிஓடுகிறோமோ, அந்தத் தனித்துவம் மேற்குலகின் உலகாயதத்துள் கரைந்து போகும் பேராபத்தும் இருக்கிறது!

அங்கே உருவாகும் அடுத்த தலைமுறை மேற்கின் சமூக விழுமியங்களை உள்வாங்கிய பண்பாட்டின் உருவாக்கமாகவே இருக்கும். அதைப்பார்த்துக் கழிவிரக்கப் படுவதைத் தவிர, மூத்த தலைமுறையால் ஏதும் செய்ய இயலாது!

தமிழர் தமது முன்னுரிமைப் பட்டியலை (priorities) மீள ஒழுங்கு படுத்தவேண்டும். பணத்தை முன்வைத்தே வாழும் இனமாகிய நாம், தமிழ் - தனித்துவம் - பண்பாடு என்று பேசுவது வெறும் மிகையுணர்ச்சி (sentimental) ஆகவே கருதப்படும்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் 180 புள்ளிகளுக்கு மேல் பெற்றும் பல்கலைக்கழக அனுமதியைப்பெற முடியாது போன மாணவர்களை பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

1990 - 91 -ம் கல்வியாண்டுக்கான புதிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும்போது, பல்கலைக்கழக கல்லூரிகளில் இந்த மாணவர்களுக்கும் விரிவுரைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## வெளிவாரிப் பரீட்சை நடாத்த சகல பல்.கழகங்களுக்கும் அனுமதி

வெளிவாரிப் பட்டப் பரீட்சைகளை நடாத்துவதற்கு சகல பல்கலைக்கழகங்களுக்கும். அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகம் மட்டுமே வெளிவாரிப்பரீட்சைகளை நடாத்தி வருகின்றது

எல்லாப் பல்கலைக்கழகங்களும் வெளிவாரிப் பரீட்சையை நடாத்தலாம் என்ற தீர்மானத்தையடுத்து யாழ் பல்கலைக்கழகமும் வெளிவாரிப் பரீட்சைகளை நடாத்தவுள்ளதாக அறியப்படுகின்றது.

பல்கலைக்கழகத்திலேயே வெளிவாரி விரிவுரைகளை நடாத்தி பரீட்சையை வைப்பதற்கும் ஆலோசிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது (74)

## தீவுப்பகுதி அகதிகளுக்கு நோய்கள் பரவுகின்றன

தீவுப்பகுதியில் உள்ள அகதிகள் பல்வேறு நோய்களுக்கு இலக்காகி வருகின்றனர். இவர்களுக்கு போதிய சுகாதார வசதிகள், மருந்துகள் கிடைக்காததாலேயே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்றனர்

வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற நோய்கள் அதிகமானோருக்கு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைதியாக வாழும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. (அம்சம் 14).

எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. இந்த உரிமை காரணமாக அவர்கள் தமது அரசியல் இறைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கவும் தமது பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியில் சுதந்திரமாக ஈடுபடவும் உரிமையுண்டு. (அரசியல் உரிமை அம்சம் 1).

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ உரிமையுண்டு. இந்த உரிமை சட்டத்தால் காப்பாற்றப்படவேண்டும். எவரது உயிருமே விசாரணையின்றிப் பறிக்கப் படக்கூடாது. 'அரசியல் உரிமை அம்சம் 6'

ஒவ்வொருவரும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ உரிமையுண்டு. எவருமே குற்றஞ் சுமத்தப்படாது. விசாரணையின்றி கைது செய்யவோ தடுத்து வைப்பதற்கோ ஆளாகக்கூடாது எவர் உரிமைகளும் மறுக்கப்படக்கூடாது, சட்டத்தில் நியமம் பெற்றால் அன்றி (அம்சம் 9—1).

கைது செய்யப்படுபவர் கைதுசெய்யப்படும் நேரம் காரணம், அவருக்செதிரான குற்றச்சாட்டு — இவை தெரிவிக்கப்படவேண்டும். (அம்சம் 9—2)

மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் கொள்கைப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட உலக நாடுகள் (ஸ்ரீலங்கா உட்பட) இன்றும் மனித உரிமகளை மீறிச் செயற்படுகின்றன.

வல்லரசுகள் வளர்ந்து வரும் நாடுகளைத் தம் பிடிக்குள் வைத்திருப்பதும் மூன்றாம் உலக நாடுகள் இன, மொழி, நிற பேதங்களால் அழிந்து கொண்டிருப்பதும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் கண்களுக்குத் தெரியவில்லையா?

ஜனநாயக அரசியற்போர்வையில் பெரும்பான்மையினர் அரசுகள் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுத்துச் செயற்படுவது ஐக்கிய நாடுகள் மன்றம் பிரகடனஞ் செய்த மனித உரிமைகள சாசனத்திற்கு எதிரானதா? இல்லையா? உள்நாட்டுப் பிரச்சினை என்ற போர்வையில், சுய நிர்ணய உரிமைகளற்று அடிமையாக வாழும் இலங்கைத் தமிழினம் கடந்த நாற்பதாண்டு காலமாக எழுப்பும் குரல் ஐ. நா. வுக்கு கேட்கவில்லையா?

(சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)

24 நோயாளிகள், தபாற்பொதிகள், சிலின்டர்களுடன்

# மூன்று வாரம் தரித்திருந்த உணவுக் கப்பல் பருத்தித்துறையிலிருந்து நேற்றுப் புறப்பட்டது

24 கடும் நோயாளிகளும், அவர்களுக்கு உதவியாக மேலும் 24 பேரும் இந்த நோயாளிகளைக் கவனிப்பதற்கான நான்கு வைத்தியத்துறை உத்தியோகத்தர்களும் நேற்று பருத்தித்துறையில் இருந்து குமண கப்பல் மூலம் சென்றனர். இக்கப்பலில் ஆஸ்பத்திரித் தேவைக்காக 155 வெற்று பிராணவாயு சிலின்டர்களும், தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

குமண கப்பல் பருத்தித்துறையில் இருந்து நேரடியாக கொழும்பு செல்லமாட்டாது. என்றும் அடுத்த 12 மணித்தியாலங்களில் திருகோணமலை சென்றடையும் என்றும் அங்கிருந்து நோயாளிகள் செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல் புறப்படும் தினம் பல தடவைகள் பின்போடப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவிலேயே புறப்பட்டது.

இதேவேளை கொழும்பிலிருந்து லங்கா ஸ்ரீ என்ற கப்பல் அத்தியாவசிய மருந்துகளையும் வங்கிகளுக்கான பணம் மற்றும் தபாற்பொதிகளையும், ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு இன்று அல்லது நாளை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊரடங்குச் சட்டம், சீரற்ற கால நிலை காரணமாக குறிப்பிட்ட தினத்துக்குள் இக்கப்பலிலிருந்து பொருட்களை இறக்கமுடியாததே இது கொழும்பு திரும்புவதற்கு தாமதமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த 7 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்த 'விங்கோ ரேடர்ஸ்' என்ற கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

விங்கோ ரேடர்ஸில் முல்லைத்தீவுக்கான உணவுப் பொருட்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இக்கப்பல் கொழும்பு திரும்பும் போது முல்லைத்தீவில் உணவுப் பொருட்களை இறக்கிவிட்டுச் செல்லும். (50, 38)

## பருவகால மீன்பிடித் தொழிலின்றியும் மீனவக்குடும்பங்கள் பாதிப்பு

காங்கேசன்துறை தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான மீனவர்கள் இப்பருவ காலத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாததினால், இத் தொழிலை நம்பிவாழும் பல்லாயிரக் கணக்கானோர் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

வாடைக்காற்று வீசுகின்ற அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் இப்பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தீவுப் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்று மீன்பிடித்தொழிலை மேற்கொள்வது வழக்கம்.

ஆனால் இம் முறை தீவுப் பகுதிக் கடல் பகுதியில் படையினரின் கெடுபிடி, தாக்குதல் சம்பவங்களினால் இப்பகுதி மீனவர்கள் தீவுப்பகுதிக் கடற் பிராந்தியத்துக்கு இடம் பெயர்ந்து சென்று தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தொழில்கள் இன்றியும் இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் பலத்த கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. (50, 44)

## 50ஆயிரத்துக்கும் அதிகமான காணி உறுதிகள் பதியப்படவில்லை

யாழ் மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான காணி உறுதிகள் பதிவு செய்யப்படாத நிலையில் உள்ளதாக அறியப்படுகிறது.

இந்த உறுதிகள் தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் ஆகியோர் வசம்உள்ளன.

1987-ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக பலதடைவைகள் யாழ் காணிப்பதிவகம் செயல் இழந்திருந்தமையை இவ்வாறான தேக்கத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

1988-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை எழுதப்பட்ட காணி உறுதிகள் பதிவு செய்யப்பட்டுவிட்டனஎன காணிப் பதிவக வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது(66)

### தென் தமிழீழ...

அதிகரித்துள்ளன.

தென் தமிழீழத்தில்(கிழக்கில்) சிறிலங்கா இனவாத அரசின் சித்திர வதைகளுக்கும், முஸ்லிம் ஊர்காவல் படையினரின் கொடுமைகளுக்கும் இடையே சிக்கித்தவித்துதினமும்துயருற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் சகோதரர்கள், அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கவில்லை மரணிக்கும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீடு, வாசல்களை மட்டும் இழக்கவில்லை. சொந்த உறவுகளையும் தொலைத்து விட்டுத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். பாச உறவுகள் மரணித்துவிட்டது கூடத் தெரியாமல் "வருவார்கள் அவர்கள்" என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு தாயும் தன் பிள்ளை ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும். முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் குத்திக்குறைப்பட்டு குற்றுயிருடன் எரிக்கப்படுவதைப் பார்க்கிறாள். மனரீதியான பாதிப்புடன் வாழ்நாளைக் கடத்துகிறாள். பெற்ற மகள் இரண்டு இனத்து காடையர் கூட்டத்தால் இழுத்துச் செல்லப்படும் போது எதிர்த்துப் போராடி எதுவுமே செய்யமுடியாத இயலாத கட்டத்தில் துவண்டு துடிக்கும் பெற்றோரின் மனக்கொதிப்பை வார்த்தைகளால் விளக்கிவிடமுடியாது. பாலியல்வன்முறைக்குட்படுத்தப்படும் பெண்கள் தடையமே தெரி

### எதிர்க்கட்சி...

உடனடியாக ஆரம்பிக்க முடியாது எனவும் கூறி எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்தார்.

இதைத்தொடர்ந்து எதிர்க்கட்சியினருக்கும் ஆளும் கட்சியினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. சில மணி நேரம் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

சபை தனது முடிவை பின்னர் அறிவிக்கும் எனக்கூறி சபாநாயகர் சிலமணி நேரம் கூட்டத்தொடரை ஒத்தி வைத்தார்.

### நெருக்கடியான...

அன்றாட வேலைகளைச் செய்யப் பழக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் கடமைக்குச் செல்லத் தயங்குவதை நியாயப்படுத்த முடியாது.

பாதுகாப்பு இல்லை என்ற

### குருநகரில்...

கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மற்றைய மூவர்களில் இருவர் குருநகர் சிற்றூரவை உறுப்பினர்களாவர். அதில் ஒருவர் யாழ் மாநகர சபை ஊழியர்.

நாலாயிரம் ரூபா நிவாரணம் பெறுவதற்கு இக்கிராம

### முதலாம் தரத்திற்கு பதவியுயர்வு

யாழ் மாவட்ட மேலதிகப் பதிவாளரும், காணிப் பதிவாளருமாகிய திரு. ஜே என் போர்மன் பதிவாளர் நாயக திணைக்கள பதிவாளர் சேவையின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலும் கடமையாற்றியவர் இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

காங்கேசன்துறை கொத்தணி ஆசிரியர்கள்

## கிழக்கு மாகாண அகதிகளுக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்குவர்

கிழக்கு மாகாண அகதிகளுக்கு உதவுவதற்காக காங்கேசன்துறைக் கொத்தணியைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை வழங்கவுள்ளனர்.

மேற்படி கொத்தணியைச் சேர்ந்த 186 ஆசிரியர்களும் சேர்ந்து சுமார் பதினையாயிரம் ரூபாவினை வழங்கவுள்ளனராம். (32)

சங்குப்பிட்டி, கேரதீவு துறையில்

## பொதுமக்களுடன் பண்பாக நடந்துகொள்ள வேண்டும்

சங்குப்பிட்டி - கேரதீவு இறங்குதுறையில் சேவை புரிபவர்கள் பொதுமக்களுடன் கௌரவமின்றி நடந்துகொண்டால் அல்லது, லஞ்சம் கேட்டால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மன்னார்ப் பகுதி விடுதலைப்புலிகள் நிதிப் பிரிவின் உறுப்பினர் சபேசன் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

அண்மைக் காலமாக இங்கு பணிபுரியும் சிலர் பொதுமக்களுடன் கடுமையாக நடந்து கொள்வதாக வந்த புகார்களையடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி

## பராசத்தி வித்தியாலய மாணவர்களுக்கு மாற்று ஒழுங்குகள்

இராணுவத்தால் சேதமாக்கப்பட்ட அல்லைப்பிட்டி பராசத்தி வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வேறு இடத்தில் வகுப்புக்களை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி அல்லைப்பிட்டியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் தற்காலிகமாக இப் பாடசாலை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (19)

## அத்தியாவசிய பிரிவுகள் செயலகத்தில் இயங்குகின்றன

யாழ் செயலகத்தின் கீழ் உள்ள அத்தியாவசியப் பிரிவுகள் தற்போது முழு அளவில் செயற்படத் தொடங்கியுள்ளன.

உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு புனர்வாழ்வு புனரமைப்பு, சமூகசேவைப்பிரிவு, ஓய்வூதியப்பிரிவு, கணக்குப் பிரிவு உட்பட பல கிளைகளிலும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் வரவு அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

போக்குவரத்துச் சீர்கேடு காரணமாக, வடமராட்சி போன்ற தூர இடங்களில் இருந்து வரும் உத்தியோகத்தர்கள் கிழமையில் மூன்று நாட்களுக்காவது கடமைக்குச் செல்லவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருப்பதாகச் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (66)

## செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு விஜயம்

இலங்கையில் இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் திரு. பிலிப்ஸ் கொண்டிசா நேற்று யாழ் போதனா வைத்தியசாலையையும் அதன் செயற்பாடுகளையும் நேரில் பார்வையிட்டார்.

சங்கத்தின் யாழ் பிரிவுத் தலைவருடனும், மற்றும் குடாநாட்டின் முக்கிய தலைவர்களுடனும் நேற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். (70)

பாண்விலையில்

யாது.

பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தை முன்னிட்டு வேலைக்குப் போகாத ஊழியர்கள் எந்நேரமும் தங்கள் வீட்டிற்குள் அல்லது பதுங்கு குழிக்குள் இருப்பதில்லை. வெளியில் சென்று தங்கள் அன்றாட வேலைகளை கவனித்து வருகிறார்கள். வான் தாக்குதல் நடைபெறும் வேளைகளில் மட்டுமே பதுங்கு குழிக்குள் செல்கிறார்கள். ஆனால் அலுவலகங்களில் பதுங்குகுழி அமைத்துக் கொண்டால் பணிமனைகளில் பாதுபாப்பை உறுதி செய்ய முடியும்.

எனவே எமது தாயகத்தில் வாழும் மக்களின் அத்தியாவசிய சேவைகளை வழங்கிஅவர்களின் இன்னல்களைக் குறைத்து,வ்டுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க அனைத்து அரச, கூட்டுத்தாபன ஊழியர்களும் தத்தமது அலுவலகங்களுக்குச் சென்று கடமையாற்று உதவவேண்டுமென்றும் அன்புடன் வேண்டுகின்றோம் என அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

ரணம் பெறுவதற்கு இக்கிராமசேவகர் 500 ரூபாவை சிலரிடம் பெற்று மேலதிகமாக இதற்கான பதிவு அட்டைகளை வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய உதவியாளர்கள் இப்பகுதியில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களின் பெயர்களை பட்டியலில் பதிந்து நாலாம் கட்ட நிவாரணம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன்வருமானம்உடையவர்களின் பெயர்களை இலவச நிவாரணப் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கும் இலவச நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்ததாகவும்இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது,

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் நிவாரண மோசடி தொடர்பாக விசாரணைக்காகக்கொண்டு செல்லப்பட்ட சுண்டுக்குளி தெற்கு (J75) கிராமசேவகரும் மற்றும் ஆறு பேரும் நேற்று விடுவிக்கப்பட்டனர். (ப17)

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறறெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 10-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

கது. (66)

## கொழும்பு...

பூந்தோட்டப் பகுதியால் செல்வதற்குச் சில பிரயாணிகள் முயற்சி செய்த பொழுது இராணுவம் வானத்தை நோக்கிச் சுட்டு மக்களைக் கலைத்ததாகவும், பிரதான வீதியாலேயே போகும்படி பணித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (70)

## விசர்

டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு போதியளவு விசர் நாய்க் கடித்தடுப்பூசி மருந்துகளை அனுப்புமாறு பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டும் கொழும்பிலுள்ள சுகாதாரத் தலைமையலுவலகம் அக்கறையின்றி இருப்பதுடன், இதற்காக 'சொறி சிரங்குக்குக்கு' பாவிக்கப்படும் மருந்துகளையே பெருமளவு அனுப்பி வைத்துள்ளது. செஞ்சிலுவைச்சங்கமும் இதனைத் தருவிப்பதாக கூறியதும் குறிப்பிடத்தக்கது.

ஆஸ்பத்தரிகளில் இந்த மருந்து இன்றி பாதிக்கப்பட்ட பலர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

பெண்கள் தடையமே தெரியாமல் கொல்லப்படுகின்றார்கள்.கைது செய்யப்படும்ஆண்கள்திரும்பிவராத இடத்துக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

அன்னை, தந்தையை அரக்கர்களிடம் இழந்து விட்டு ஆதரவின்றி அழுகின்ற மழலைகளும், அநாதைகளாக்கப்பட்ட தம் பேரக்குழந்தைகளுக்காக தளராத வயதிலும் உணவுதேடிக் கொடுக்கும் நிலையில் வயோதிபர்கள்.

இந்தநிலையில் எமது சகோதரர்களுக்கு நாம் தான் உதவவேண்டும். 'பரணிப்பதிலாவது நிம்மதிகிடைக்கும்' என்று வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்துகொண்டிருக்கும் அவர்களுக்கு உறுதியுடன் சகோதரர்களே உதவிட நாம் இங்கே' என்றநம்பிக்கையை ஊட்ட நீங்கள் அனைவரும் முன்வருவீர்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் உங்கள் மூன் வருகின்றோம்.

அவர்களுக்கு நீங்கள் கொடுக்க நினைக்கின்ற பொருள் ஆடையாக இருக்கலாம், சமைப்பதற்கு உதவும் பாத்திரமாகஇருக்கலாம்,பணமாக இருக்கலாம், எந்தவடிவத்திலும் அவற்றைத் தந்துதவ முன்வருவீர்கள் என்று

உறுதியுடன் நம்பி உங்களிடம் வருகின்றோம். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வையிட்டார்.

இவர் நேற்று முன்தினம் யாழ்பபாணம் வந்திருந்தார்.

திரு பிலிப்ஸ் கொண்டிசா இலங்கை செஞ்சிலுவைச்

## வடக்குக்...

அனுப்பவேண்டும் என புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்திருந்தும் இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப11)

## முற்பணம்...

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, மருதனாமடப், சாவகச்சேரி, வேலணை ஆகிய கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும், பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களுக்கும் இது குறித்து சுற்று நிருபம் அனுப்பப்பட்டுளளது.

இது இறுதி நடவடிக்கை என்றும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ப17)

## பாண்விலையில் வேறுபாடு

யாழ் குடாநாட்டில் பாண் விற்பனையில் பல இடங்களிலும் இடத்துக்கிடம் வித்தியாசமான முறையில் விற்பனையாவதைக் காண முடிகிறது.

பாண் விலை 7.50 தொடக்கம் 10.50 ரூபா வரை செல்கிறது. குறிப்பாக கல்வியங்காடு சட்டநாதர் கோவிலுக் கருகாமையிலுள்ள ஒரு கடையில் 7 ரூபா 50 சதத்திற்கு பாண் விற்பனையாகிறது. (33)

## தேவை

பிரபல சைவ,அசைவ உணவுவகைக் கடைகளுக்கு உணவுசமையற் பணியாட்கள் (எந்தவகைகளும், தயாரிப்பு முறைகளும்) தெரிந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

மே/ப. முரசொலி
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

12074